## ஈரோடு மாவட்டத்தில் ரூ.6.33 கோடி மதிப்பீட்டில்

# 13,140 மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

## அமைச்சர் சு.முத்துசாமி தகவல்!



ஈரோடு, ஆக. 2 -

ஈரோடு மாநகராட்சிக் குட்பட்ட அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் ஆட்சியர் திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) மனிஷ், தலைமையில், ஈரோடு மாநகராட்சி மேயர் சு.நாகரத்தினம் சுப் பிரமணியம் முன்னிலை யில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு, ஆயத்தீர்வைத துறை அமைச்சர் சு.முத்து சாமி பள்ளிக் கல்வித் துறை யின் சார்பில் 1012 மாணவ, மாணவியர்களுக்கு விலை யில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

அதுபோது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச் சித் துறை, மதுவிலக்கு, ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி கூறியதாவது...

முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் நலனுக் காக எண்ணற்ற பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்புடன் செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக, ஈரோடு மாவட்டத்தின் வளர்ச்சிக்காக எண்ணற்ற திட்டங்களை முதல மைச் சர் அவர்கள் வழங்கியுள் ளார். நமது மாவட்டத்தை சார்ந்த மாணவ, மாணவி யர்கள் பயன்பெறும் வகை யில் சிக்கய்யநாயக்கர் கல் லூரியில் விளையாட்டுத் துறையை மேம்படுத்தும் வகையில் உலகத்தரம் வாய்ந்த உள் விளையாட்டு அரங்கமும், பொது அறி வினை வளர்த்திக் கொள்வ தற்காக சென்னை, மதுரை போன்ற இடங்களில் அமைந்துள்ளதை போல் மிகப் பெரிய அளவிலான நூலகமும் மற்றும் போட் டித் தேர்வுகளை எதிர் கொள்வதற்காக போட் டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையங்களும் அமைப்பதற்கு நடவ டிக்கை மேற்கொள்ளப்ப டும்.

மேலும், பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களின் எதிர்காலத்திற்கான சிறப்பு மிக்க திட்டங்களை பிற மாநிலங்கள் பின்பற்றும் வகையில் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, மகளிருக்கு கட்டண மில்லா பேருந்து பயணம், இல்லம் தேடி கல்வி திட் டம் மற்றும் பெண்களின் உயர் கல்வியினை ஊக்கு விக்கும் வகையில் அரசு பள்ளியில் 12ஆம் வகுப்பு முடித்து கல்லூரிகளில் சேரும் மாணவியர்களுக்கு புதுமைப்பெண் திட்டத் தின் கீழ் மாதம் ரூ.1000 வழங்கும் திட்டம் உள் ளிட்ட பல்வேறு திட்டங் கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஈரோடு மாவட்டத்தில் பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் பள்ளி மாணவ, மாணவியர்கள் பயன் பெறும் வகையில் விலை யில்லா மிதிவண்டிகள் வழங்கப்படுகிறது. இதில் ஈரோடு மாவட்டத்தில் உள்ள 127 அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளி களில் பயிலும் 5,550 மாண வர்கள் மற்றும் 7,590 மாண வியர்கள் என மொத்தம் 13,140 எண்ணிக்கையில் ரூ.6,33,23,400 மதிப்பீட்டி லான விலையில்லா மிதி வண்டிகள்வழங்கப்பட உள்ளது.

அதன்படி, ஈரோடு மாந கராட்சிக்குட்பட்ட அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி யில் பயிலும் 195 மாணவி யர்களுக்கும், கலைமகள் கல்வி நிலையம் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 361 மாணவியர்க ளுக்கும், ஈரோடு கருங்கல் பாளையம் நகர மகளிர் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 222 மாணவியர்க ளுக்கும், செங்குந்தர் மேல் நிலைப் பள்ளியில் பயிலும் 162 மாணவர்களுக்கும் மற் றும் ஈரோடு கருங்கல்பா ளையம் காமராஜர் நகர மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 72 மாணவர்களுக் கும் என 1012 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.48,49,880 மதிப்பீட்டி லான விலையில்லா மிதி வண்டிகள் வழங்கி இத்திட் டம் துவக்கி வைக்கப் பட்டுள்ளது. மேலும், மாணவ, மாணவியர்கள் நல்ல முறையில் கல்வி கற்று தங்களது பெற்றோருக்கும் மற்றும் தங்களது பள்ளிக் கும் பெருமை சேர்க்க வேண்டும் எனவும் மாணாக்கர்களின் நலனுக் காக அரசு அளிக்கின்ற திட் டங்களை நல்ல முறையில் பெற்றுக் கொண்டு பயன் பெற வேண்டும் என தெரி வித்தார்.

நிகழ்ச்சியில், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், முதன்மை கல்வி அலுவலர் குழந்தைராஜன், மாநக ராட்சி மண்டல குழு தலை வர்கள் சசிகுமார் ப.க..பழ னிசாமி, சுப்பிரமணியம், தண்டபாணி, மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் கஸ்தூரி, பள்ளி தலைமையாசிரியர் சுகந்தி, மாமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட தொடர்பு டைய துறை அலுவலர்கள் பலர் உள்ளனர்.




கோயம்புத்தூர் மாவட்டம், துடியலூர் அரசு ஆண்கள் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தை தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி. கணேசன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் வீரராகவராவ், மண்டல பயிற்சித் துறை இணை இயக்குனர் முஸ்தபா, தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் லீமா ரோஸ், நிலைய மேலாளர் குழுத் தலைவர் நரேந்திரன் ஆகியோர் உள்ளனர்.

## மேலும் கடைகள் விரிவுபடுத்தப்படுகிறது!

# 500 ரேஷன் கடைகளில் குறைந்த விலையில் தக்காளி விற்பனை!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!



சென்னை, ஆக.2-

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தலை மையில் நேற்று முன்தினம் (31.07.2023) தலைமைச் செய லகத்தில் தக்காளி விலையேற்றம் தொடர்பாக கூட்டுறவுத்து றையின் உயர் அலுவலர்களுட னான ஆய்வுக்கூட்டம் நடை பெற்றது.

பின்னர், செய்தியாளர் களை சந்தித்த கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப் பன் தெரிவித்ததாவது:-

இந்த ஆண்டு கோடையில் கடும் வெப்பம் நிலவியதால் விவசாயிகள் தக்காளி பயிரிடு வது கணிசமாக குறைந்ததா லும், அண்டை மாநிலங்களில் இருந்து தக்காளி வரத்து குறைந்ததாலும், ஜூன் மாத இறுதியில் வெளிச்சந்தையில் தக்காளியின் விலை கிலோ ஒன் றுக்கு ரூ.100 , 120 வரை உயர்ந்தது.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தக்காளி விலை யேற்றத்தை கட்டுக்குள் கொண்டு வர பல்வேறு நட வடிக்கைகள் கூட்டுறவுத்து றையின் மூலம் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. அதன் படி, எனது தலைமையில் 27.06.2023 அன்று தலைமைச்செயலகத்தில் தக்காளியின் விலையேற்றத்தை கட்டுப்படுத்துவதற்கு ஆலோ சனை கூட்டம் நடத்தப்பட்டு கூட்டுறவுத் துறையின் கீழ் சென்னையில் செயல்படும் 27 பண்ணைப்பசுமை நுகர்வோர் கடைகள் மற்றும் 2 நகரும் பண்ணைப்பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் 28.06.2023 முதல் தக்காளி கிலோ ஒன் றுக்கு ரூ.60/ என்ற விலையில் விற்பனை செய்யப்பட்டு வரு கிறது.

தொடர்ந்து ஜூலை முதல் வாரத்திலும் அண்டை மாநி லங்களில் இருந்து தக்காளியின் வரத்து குறைவாக இருந்ததால், வெளிச்சந்தையில் தக்காளியின் விலை கட்டுக்குள் இல்லை. எனவே, மீண்டும் 03.07.2023 அன்று தலைமைச்செயலகத் தில் தக்காளியின் வெளிச் சந்தை விலையை கட்டுப் படுத்த ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. அதன்படி, சென்னையில் முதற்கட்ட மாக வடசென்னையில் 32 நியாயவி லைக்கடைகளிலும் மத்திய மற் றும் தென்சென்னை நியாய விலைக் கடைகளில் தலா 25 என மொத்தம் 82 நியாயவிலை க்கடைகளிலும், மாநிலத்தில் பிற பகுதிகளில் 215 நியாய விலை க்கடைகளிலும் என மொத்தம் 302 நியாய விலைக் கடைகள் மூலம் 04.07.2023 முதல் தக்காளி கிலோ ரூ.60/க்கு விற்பனை செய்யப் பட்டு வருகிறது.

28.06.2023 முதல் 05.07.2023 வரை சென்னையில் 15 மெட் ரிக் டன் தக்காளி கொள்முதல் செய்யப்பட்டு பொது மக்க ளுக்கு விற்பனை செய்யப்பட் டுள்ளது.

தற்போது, அண்டை மாநி லங்களில் பெய்த கனமழையி னால் தக்காளி விளைச்சல் குறைந்ததால், தக்காளியின் வரத்து குறைந்து காணப்படு கிறது. இதனால் மீண்டும் வெளிச்சந்தையில் தக்காளியின் விலை உயர்ந்துள்ளது. இந்நி லையை கருத்தில் கொண்டு, பொதுமக்கள் பாதிப்படையா மல் தடுக்கும் வகையில், முதல மைச்சர் அவர்களின் அறிவுரை யின்படி, தற்போது தமிழ்நாடு முழுவதும் தக்காளி விற்பனை 302 நியாயவிலைக்கடைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 01.08.2023 முதல் தக்காளி விற்பனையை 500 நியாயவிலைக்கடைளுக்கு நீட் டிப்பு செய்ய முடிவு செய்யப் பட்டது.

அதன்படி, அரியலூர் மாவட்டத்தில் 5 நியாயவிலைக் கடைகளிலும், செங்கல்பட்டு மாவட்டத்தில் 15 நியாய விலைக் கடைகளிலும், சென்னை மாவட்டத்தில் 100 நியாய விலைக் கடைகளிலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் 20 நியாயவிலைக் கடைகளி லும், கடலூர் மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளி லும், தருமபுரி மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளி லும், திண்டுக்கல் மாவட்டத் தில் 10 நியாயவிலைக் கடைக ளிலும், ஈரோடு மாவட்டத்தில் 15 நியாயவிலைக் கடைகளி லும், கள்ளக்குறிச்சி மாவட் டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 10 நியாய விலைக் கடைகளிலும், கன்னி யாகுமரி மாவட்டத்தில் 5 நியா யவிலைக் கடைகளிலும், கரூர் மாவட்டத்தில் 10 நியாய விலைக் கடைகளிலும், கிருஷ் ணகிரி மாவட்டத்தில் 10 நியா யவிலைக் கடைகளிலும், மதுரை மாவட்டத்தில் 20 நியா யவிலைக் கடைகளிலும், மயி லாடுதுறை மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், நாகப்பட்டினம் மாவட்டத் தில் 10 நியாயவிலைக் கடை களிலும், நாமக்கல் மாவட்டத் தில் 10 நியாயவிலைக் கடை களிலும், நீலகிரி மாவட்டத் தில் 5 நியாயவிலைக் கடைகளி லும், பெரம்பலூர் மாவட்டத் தில் 10 நியாயவிலைக் கடை களிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 10 நியாய விலைக் கடைகளிலும், இராம நாதபுரம் மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், இராணிப்பேட்டை மாவட் டத்தில் 5 நியாயவிலைக் கடை களிலும், சேலம் மாவட்டத்தில் 20 நியாயவிலைக் கடைகளி லும், சிவகங்கை மாவட்டத் தில் 5 நியாயவிலைக் கடைகளி லும், தென்காசி மாவட்டத்தில் 5 நியாயவிலைக் கடைகளி லும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 15 நியாயவிலைக் கடைகளி லும், தேனி மாவட்டத்தில் 5 நியாயவிலைக் கடைகளிலும், திருச்சி மாவட்டத்தில் 20 நியா யவிலைக் கடைகளிலும், திரு நெல்வேலி மாவட்டத்தில் 15 நியாயவிலைக் கடைகளிலும், திருப்பத்தூர் மாவட்டத்தில் 5 நியாயவிலைக் கடைகளிலும், திருப்பூர் மாவட்டத்தில் 10 நியாயவிலைக் கடைகளிலும், திருவள்ளூர் மாவட்டத்தில் 15 நியாயவிலைக் கடைகளிலும், திருவண்ணாமலை மாவட்டத் தில் 10 நியாயவிலைக் கடைக ளிலும், திருவாரூர் மாவட்டத் தில் 5 நியாயவிலைக் கடை களிலும், தூத்துக்குடி மாவட் டத்தில் 15 நியாயவிலைக் கடைகளிலும், வேலூர் மாவட் டத்தில் 15 நியாயவிலைக் கடைகளிலும், விழுப்புரம் மாவட்டத்தில் 10 நியாய விலைக் கடைகளிலும், விருது நகர் மாவட்டத்தில் 10 நியாய விலைக் கடைகளிலும் என தமிழ்நாடு முழுவதும் 500 நியாய விலைக் கடைகளில் நேற்று (01.08.2023) முதல் தக் காளி கிலோ ஒன்றுக்கு ரூ.60/ என்ற விலையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

### விளைச்சல் குறைவே காரணம்!

இந்த விலையேற்றத்திற்கு காரணம், விளைச்சல் குறைவு மற்றும் அண்டை மாநிலங்க ளில் வரத்து குறைவே ஆகும். இது ஒரு இயற்கையான விலை யேற்றமே தவிர, செயற்கையானது அல்ல என் பதை தெரிவித்துக் கொள்கி றேன். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி தக் காளி விலையினை கட்டுக் குள் கொண்டுவர அனைத்து நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டு வரு கிறது என கூட்டுறவுத்துறை அமைச் சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.

இந்த செய்தியாளர் சந்திப் பின் போது, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப் புத்துறை செயலாளர் ஜகநா தன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மருத்துவர் நா.சுப் பையன் ஆகியோர் உடனிருந் தனர்.

## ஆதிதிராவிடர் துணைத் திட்டத்தின்

# நிதியை பிற திட்டங்களுக்கு பயன்படுத்துவதாக கூறுவது முற்றிலும் தவறானது!

## ஆதிதிராவிடர் நலத் துறை விளக்க அறிக்கை!

சென்னை, ஆக.2 -

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை செயல்ப டுத்த ஆதிதிராவிடர் துணைத் திட்டங்களின் நிதியை பயன்ப டுத்தியுள்ளதாக தவறான தக வல்கள் வெளியாகியுள்ளன என்றும் ஆதிதிராவிடர் துணைத் திட்டங்களின் நிதியை பிற திட்டங்களுக்கு பயன்படுத்து வதாக கூறுவது தவறானது மற் றும் உண்மைக்குப் புறம்பா னது என்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை தெரிவித்துள்ளது.

இது குறித்து அத்துறை வெளியிட்டுள்ள விளக்க அறிக்கை வருமாறு :-

கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத்தை செயல்ப டுத்த ஆதிதிராவிடர் துணைத் திட்டங்களின் நிதியை பயன்ப டுத்தியுள்ளதாக தேசிய பட்டி யல் இனத்தினருக்கான ஆணை யத்தில் ஒரு தனிநபர் புகார் அளித்துள்ளதாக அண்மையில் ஊடகங்களில் சில செய்திகள் வெளிவந்துள்ளன. ஆதிதிராவி டர் துணைத் திட்டம் மற்றும் அதற்கான நிதி ஒதுக்கீடு முறை யைப் பற்றிய தவறான புரித லின் காரணமாக தான் இந்த புகாரும், அதனை பற்றிய செய் திகளும் எழுந்துள்ளன.

பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் பயன்கள், பட் டியலினத்தவர் மற்றும் பழங்கு டியின மக்களுக்கு, அவர்களின் மக்கள் தொகைக்கு ஏற்ப கிடைப்பதை உறுதி செய் வதே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட் டங்க ளின் நோக்கமாகும். இந் தத் திட்டங்களின் கீழ் இப்பி ரிவு மக்கள் மட்டுமே பயன்பெறத்தக்க திட்டங் களும், பொதுத் திட்டங்களின் கீழ் இப்பிரிவு மக்கள் பயன்பெ றும் திட்டங்களும் உள்ளன. இந்த முறையின்படி, பொதுத் திட்டத்தின் ஒட்டுமொத்த ஒதுக்கீட்டில், பட்டியலின மக் களுக்கு வழங்கப்பட வேண் டிய பயன்களுக்கு நிதி தனி யாக ஒரு தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிறது. இத்தலைப் பின் கீழ் ஒதுக்கப்படும் நிதியை அப்பிரிவு மக்களுக்கு மட்டுமே செலவிட இயலும். இந்தத் தனி ஒதுக்கீடு முறையை தான் ஒன் றிய அரசும், பிற மாநிலங்க ளும் பின்பற்றுகின்றன. ஒன் றிய அரசின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம், இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதிய திட்டம், பிரதம மந்திரி வீட்டு வசதி திட்டம் (நகர்ப்புரம்), அனைவருக்கும் கல்வி இயக் கம், தேசிய சுகாதார இயக்கம் மற்றும் தூய்மை பாரத இயக் கம் (ஊரகம்) போன்ற முக் கிய திட்டங்களுக்கு இந்த முறையில் தான் ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்கிறது.

திட்டத்தின் பெயர் - ஒட்டு மொத்த ஒதுக்கீடு வரவு செலவு திட்டம், மொத்த ஒதுக்கீட்டில் ஆதிதிராவிடருக்கான ஒதுக்கீடு வருமாறு:-

வ.எண்

திட்டத்தின் பெயர்

ஒட்டுமொத்த ஒதுக்கீடு

(வரவு செலவு திட்டம்)

மொத்த ஒதுக்கீட்டில் ஆதி திராவிடருக்கான ஒதுக்கீடு

மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட் டம் 60,000 கோடி, ஆதிதிராவி டருக்கானது 10,500 கோடி, இந்திரா காந்தி தேசிய முதி யோர் ஓய்வூதிய திட்டம் 6,634 கோடி, 1,296 கோடி, பிரதம மந்திரி வீட்டு வசதி திட் டம் (நகர்ப்புரம்) - 25,103 கோடி, 4,162 கோடி, அனைவ ருக்கும் கல்வி இயக்கம் 37,453 கோடி, 7,535 கோடி, தேசிய சுகாதார இயக்கம் 22,095 கோடி ரூபாய், 4,518 கோடி ரூபாய், தூய்மை பாரத இயக் கம் (ஊரகம்) 7,192 கோடி ரூபாய், 1,355 கோடி (ரூ கோடி யில்)

தகவல்கள் ஒன்றிய அரசின் வரவு செலவு திட்டத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

இதுபோன்றே, தமிழ்நாடு அரசு நிதியிலிருந்து செயல்ப டுத்தப்படும் மூவலூர் இராமா மிர்தம் அம்மையார் புதுமைப் பெண் திட்டம், டாக்டர் முத் துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம், இலவச வேட்டி சேலை வழங்கும் திட் டம் மற்றும் இலவச சீருடை போன்ற மாநில அரசின் திட் டங்களுக்கும் இதே முறையில் தான் பட்டியலினத்தவருக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

### ரூ.17,076 .கோடி நிதி ஒதுக்கீடு!

இதே போல் தான் கலை ஞர் மகளிர் உரிமை திட்டத்திற்கும் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது. 2023-24 வரவு செலவு திட்டத்தில் இத்திட் டத்திற்கு ஒதுக்கப்பட்ட 7000 கோடி ரூபாயில், பட்டியல் இனத்தவர்க்கென 1,540 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மாநில அரசு செயல்படுத்தும் இந்த மகத்தான புதிய திட்டத் தில் பட்டியலினத்தவர் விடுப டாமல், திட்டத்தின் பயன்கள் அவர்களுக்கு சென்றடைவதை உறுதி செய்ய, திட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டில், பட்டிய லினத்தவருக்கென தனியாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, ஒதுக்கப்பட்ட 1,540 கோடி ரூபாயை பட்டியலினத் தவருக்கு மட்டும் தான் செல விட இயலும். இது மட்டு மன்றி, கடந்த 2020-21 ஆம் ஆண்டு 13,680 கோடி ரூபா யாக இருந்த பட்டியலின மக் களுக்கு பயனளிக்கக் கூடிய ஆதி திராவிடர் துணைத் திட் டங்களுக்கான ஒதுக்கீடு, 2023-24 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 17,076 கோடி ரூபாயாக உயர்த்தப்பட் டுள்ளது.

சமூக நீதி மற்றும் அனைவ ரையும் உள்ளடக்கிய வளர்ச் சியை அடித்தளமாக கொண் டுள்ள இந்த அரசு, பட்டியலினத்தவரின் சமூக பொருளாதார மேம்பாட்டிற் காக பல்வேறு புதிய திட்டங் களை கொண்டு வந்துள்ளது. பட்டியலினத்தவர் / பழங்குடி யின தொழில் முனைவோர்க ளின் பொருளாதார மேம் பாட்டை ஊக்குவிக்க 'அண் ணல் அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டம்' 100 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன் தொடங்கப்பட்டுள்ளது. ஊரக மற்றும் நகர்புர பகுதிகளில் அடிப்படை வசதிகளை உறுதி செய்ய, 5 ஆண்டுகளில் 1000 கோடி ரூபாய் ஒட்டுமொத்த ஒதுக்கீட்டுடன், 'அயோத்தி தாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம்' அறி விக்கப்பட்டுள்ளது. பட்டியலி னத்தவர் / பழங்குடியின சமூ கத்தினரின் புத்தொழில்களில் முதலீட்டு செய்வதற்கு, 'தமிழ் நாடு ஆதி திராவிடர் / பழங்கு டியினர் புத்தொழில் நிதி' 50 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன் இந்த ஆண்டில் செயல்படுத்தப் பட்டு வருகின்றது. இந்தத் திட் டங்கள் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினரிடம் பெரும் வரவேற்பைப் பெற் றுள்ளன.

மேலும், இவ்வாண்டு சட் டமன்றத்தில் பட்ஜெட் கூட் டத் தொடரின் போது, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியி னர் துணைத் திட்டங்களின் நிதியை சிறப்பாக செயல்படுத் திட ஒரு சிறப்பு சட்டம் இயற் றப்படும் என அரசு அறிவித் துள்ளது. இதற்கென பல்வேறு தரப்பினருடன் கலந்தாலோச னைகள் நடைபெற்று வருகின் றன. பட்டியல் இன மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக, இச் சட்டம் மிக விரைவில் நிறை வேற்றப்படும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டங்களுக்கு ஒதுக் கப்பட்ட நிதியின் செலவி னத்தை சிறப்பாக கண்கா ணிக்க நிதி துறையில் ஒரு சிறப்பு பிரிவும் உருவாக்கப்பட் டுள்ளது.

எனவே, ஆதி திராவிடர் துணைத் திட்டத்தின் நிதியை பிற திட்டங்களுக்காக பயன்ப டுத்தபடுகிறது என்ற குற்றச்சாட்டு முற்றிலும் தவறா னது மற்றும் உண்மைக்கு புறம் பானது. பட்டியலினத்தவரின் நலன் மற்றும் சமூக பொருளா தார முன்னேற்றத்தில் இந்த அரசு உறுதியாக உள்ளது. பல் வேறு வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்தி வருகின்ற இவ் வரசு இந்த நோக்கங்களை அடைய தொடர்ந்து செயல் படும்.

இவ்வாறு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை வெளியிட்டுள்ள செய் திக் குறிப்பில் குறிப்பிடப்பட் டுள்ளது.



சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், இராணிப்பேட்டையில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் ஓட்டலில் உணவகம் மற்றும் தங்கும் விடுதிகளில் பயணி களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள் குறித்து ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலை வர் திருமதி.ச.வளர்மதி, ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜே.எல்.ஈஸ்வரப்பன், மண்டல மேலாளர் ஆர்.வெங்கடேசன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் திருமதி.ஜெயந்தி திருமூர்த்தி, ஒன்றியக் குழுத் தலைவர் வெங்கட்ராமன், மேல்விஷாரம் நகர மன்ற தலைவர் முகமது அமீன் ஆகியோர் உள்ளனர்.

## 'கொள்கைப் படையால் இனப்பகையை முறியடிப்போம்' என

# முதல்வர் கூறியதன் பின்னணியில் - ஒரு நீண்ட வரலாறு உண்டு!

## 'விடுதலை' நாளேடு தலையங்கம்!

சென்னை, ஆக.2

'தி.மு.க. , தி.க.வை நோக் கிச் செல்கிறது. மு.க.ஸ்டா லின் வீரமணியிடமிருந்து விலகி நிற்க வேண்டும்" என குருமூர்த்திகள் 'துக்ளக்'கில் எழுதுவதற்குப் பதிலடியாக; 'கொள்கைப் படையால் இனப்பகையை முறியடிப் போம்' என முதல்வர் அவர் கள் கூறியதன் பின்னணியில் ஒரு நீண்ட வரலாறு உண்டு என 'விடுதலை' நாளேடு 31.7.2023 தலையங்கத்தில் குறிப்பிட் டுள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:-

சமூக நீதிக்கான சரித்திர நாயகர் முதல் அமைச்சர் மான மிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் சொல்ல வேண்டிய நேரத்தில் சொல்ல வேண்டியதைச் சொல்லியிருக் கிறார்; சுழற்ற வேண்டிய சாட் டையையும் சுழற்றி யுள்ளார்.

'கொள்கைப் படைமுன் இனப்பகையை விரட்டு வோம்' என்ற வீச்சுதான் அது.

56 ஆண்டுகளுக்கு முன் தந்தை பெரியார் மிகச்சரி யாக அறுதியிட்டுச் சொன்னார்.

"இன்றைய அரசியல் போராட்டம் என்பதே கம்யூ னிஸ்டுகள் முதல் எல்லாக் கட் சிகளுக்கும் சமுதாயத் துறை தத்துவம்தான் அடிப்படை இலட்சியமே தவிர, மற்றபடி வாயால் சொல்வதற்குக்கூட கொள்கைகள் கிடையாதே! அதாவது எதுவும் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்ற அடிப்படையைக் கொண்டது தான்" (விடுதலை 22.5.1967) என்றார் தந்தை பெரியார்.

இப்பொழுது நாட்டில் என்ன நடந்து கொண்டு இருக் கிறது. ஒன்றிய அரசு என்பது பா.ஜ.க., தலைமையிலான ஆட்சி என்பது பார்ப்பன ஜனதா ஆட்சி தானே! இல்லை என்று மறுக்க முடியுமா?

ஒரு பிற்படுத்தப்பட்ட வர் பிரதமராக இருக்கிறாரே என்று சொல்லலாம். அவர் வெறும் பம்பரம்தான். சுழற்று வது ஆர்.எஸ்.எஸ்.ஸின் தலை மைப் பீடம்தானே.

இந்து ராஜ்ஜியம் என்று சொன்னாலும் சரி, ராமன் ராஜ்ஜியம் என்று சொன்னா லும் சரி; அது வருணாசிர மத்தை அடிப்படையாகக் கொண்ட பார்ப்பன ராஜ்ஜி யம்தானே!

பூணூலைப் பிடித்துக் கொண்டு தி.மு.க.வுக்கு ஓட் டுப் போடுங்கள் என்றார் ராஜ கோபாலாச்சாரியார்.

வெற்றி பெற்ற தி.மு.க. அதன் முதலமைச்சர் அண்ணா அவர்கள் ஆச்சாரியாரையா முதலில் சந்தித்தார்? திருச்சி பெரியார் மாளிகையில் இருந்த; தான் கண்ட, கொண்ட ஒரே தலைவரான தந்தை பெரியாரைச் சந்தித்து தானே "வழி காட்டுங்கள் அய்யா அதன்படி ஆட்சியை நடத்துகிறேன்" என்று சொல் லவில்லையா?

"இந்த ஆட்சியே பெரியா ருக்குக் காணிக்கை!" என்று முதல் அமைச்சர் அண்ணா அவர்கள் அதிகாரப்பூர்வமாக சட்டப்பேரவையில் பிரகட னப்படுத்தி னாரே!

அண்ணாவுக்குப் பின் முதல் அமைச்சராக வந்த முத் தமிழ் அறிஞர் கலைஞர் "இது சூத்திரர்களுக்காக சூத்திரர் களால் ஆளப்படும் நான்காம் நிலை ஆட்சியே" என்று அறி வித்து, மனுவாதி சரித்திரத் திற்கு சமாதி கட்டினாரே! (28.7.1971)

1971 தமிழ்நாடு சட்டப் பேரவைக்கான தேர்தலுக்கு சில வாரங்களுக்குமுன் திராவி டர் கழகத்தால் சேலத்தில் நடத்தப்பட்ட மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாட்டில் ராமன் படத்திற்கு தி.க.வினர் செருப் பால் அடித்தனர் என்று கூறி ராஜாஜி தலைமையில் பார்ப் பனர்கள் எல்லாம், பார்ப்ப னப் பத்திரிகைகளெல்லாம் கூப்பாடு போடவில்லையா?

தி.மு.க. தோற்கும் என்று கூறி, நிழல் அமைச்சரவை ஏற் பாடு என்கிற அளவுக்குச் சென்றதுண்டே!

தேர்தல் முடிவு என்னவாக இருந்தது? 1967 தேர்தலில் 138 இடங்களில் வென்ற தி.மு.க. சேலம் நிகழ்வுக்குப்பின் நடை பெற்ற 1971 தமிழ்நாடு சட் டப் பேரவை தேர்தலில் 184 இடங்களைக் கைப்பற்றியதே!

அப்பொழுது முதல் அமைச்சர் மானமிகு கலைஞர் என்ன சொன்னார்? "பார்ப்ப னர் பார்ப்பனர் அல்லாதார் இயக்கத்தை பெரியார் முன்பு துவக்கினார். இந்தத் தேர்த லில் ஆச்சாரியார் துவக்கி யுள் ளார். இந்தத் தேர்தலின் ஒரே புதிய அம்சம் இதுதான்" என்று திருச்சியில் செய்தியாளர்களி டம் கூறினார் முதல் அமைச் சர் கலைஞர் (3.3.1971).

'நாட்டில் நடக்கும் போராட்டம் எதன் அடிப்ப டையில்' என்று 56 ஆண்டுக ளுக்குமுன் தொலைநோக் கோடு தந்தை பெரி யார் சொன்னது பலித்து விட்டதே!

இப்பொழுது தி.மு.க. ஆட் சியை எதிர்ப்பவர்கள் யார்? தி.மு.க.வை எதிர்க்கும் ஏடு கள், இதழ்கள் எவ்வினத்தைச் சேர்ந்தவை?

'தி.மு.க., தி.க.வை நோக்கி செல்கிறது. மு.க.ஸ்டாலின் வீரமணியிடமிருந்து விலகி நிற்க வேண்டும்' என்று குரு மூர்த்திகள் 'துக்ளக்'கில் எழுது வதன் பொருள் என்ன?

அதற்குப் பதிலடியாக 'நேற்றும் சரி, இன்றும் சரி, நாளையும் சரி' எங்களை வழி நடத்துவது பெரியார் திடல் தான்' என்று பகிரங்கமாக அறி வித்து விட்டாரே! தந்தை பெரியார் பிறந்த நாளை சமூ கநீதி நாளாக அதிகாரப்பூர்வ மாக அறிவித்து அய்.ஏ.எஸ். பார்ப்பனர் வரை உறுதி மொழி எடுக்கச் செய்துவிட் டாரே!

'திராவிட மாடல்' ஆட்சி என்பது இதுதானே... இத னைப் புரிந்துகொண்டு தானே முதல் அமைச்சர் மீதும், தி.மு.க.வின் மீதும் தி.மு.க. ஆட்சியின் மீதும் சேற்றை வாரி இறைக்கிறார்கள்.

கொள்கைப் படையால் இனப்பகையை முறியடிப் போம் என்று முதல் அமைச்சர் கூறி இருப்பதன் பின்னணியில் ஒரு நீண்ட கால வரலாறு உண்டு.

இளைஞர்களே எழுவீர்! இனப்பகையை அடையாளம் காண்பீர்!

இவ்வாறு அத்தலையங்கத் தில் கூறப்பட்டுள்ளது.

நன்றி
விடுதலை
31.7.2023